இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீட்டு எண் *1917/2020*

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 21306/2019-லிருந்து எழுகிறது)

அசோக் குமார் குப்தா
மற்றும் ஒருவர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

தி/ள். சீதாலஷ்மி சாஉறூவாலா
மருத்துவ அறக்கட்டளை மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்:

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. உரிமையியல் சீராய்வு மனு (நிலுவை) எண் 2708/2013-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட 30.4.2019-ஆம் தேதியிடப்பட்ட இறுதித் தீர்ப்புரை மற்றும் உத்தரவு ஆகியவற்றை இம்மேல்முறையீடு எதிர்த்துரைக்கிறது.

3. கோயம்புத்தூர் மாவட்ட நீதிபதி முன்பாக, கீழ்க்காணும் அடிப்படை பொருண்மைகளைக்கூறி, தற்பொழுதைய மேல்முறையீட்டாளர்களால் அசல் வழக்கு எண் 566/2012-ஆனது தாக்கல் செய்யப்பட்டது:-

"III. 2-ஆம் வாதி, 1-ஆம் வாதியின் மனைவியாவார். 1-ஆம் வாதி, 2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகளின் மூத்த மகனாவார். 4-ஆம் பிரதிவாதி, 2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகளின்

இளைய மகனாவார். 6-ஆம் வாதி, 4 மற்றும் 5-ஆம் பிரதிவாதிகளின் மகளாவார், 7-ஆம் பிரதிவாதி, குடும்பத்தின் மருமகனாவார், அவர், 1-ஆம் வாதி மற்றும் 4-ஆம் பிரதிவாதி ஆகியோரின் சகோதரியை மணந்துள்ளார். வாதிகள், 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் அறங்காவலர்களும் மற்றும் அறக்கட்டளை விவரங்களில் அக்கறையுள்ள நபர்களும் ஆவர்; பொதுநல அறக்கட்டளையான 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் நிர்வாகத்திற்காக, ஒரு திட்டத்தை வகுப்பதற்காக தற்பொழுதைய வழக்கைத் தாக்கல் செய்கின்றனர்.

(IV) 2-ஆம் பிரதிவாதி 1959-ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் குடியமர்ந்தார்; அவர் தி/ள். இந்தியா ரோலர் .ப்ளோர் மில்ஸ் என்ற மாவாலை நிறுவனத்தை நடத்திவந்தார். 1-ஆம் வாதி, நடைமுறையில் ஒரு சிறந்த மாணவராவார்; அவர், தகுதியின் அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் அனுமதிபெற்று, எம்.பி.பி.எஸ். முடித்து கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பட்டம் பெற்றார். அவர், மருத்துவத்தில் மேற்படிப்பு பயின்று, சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ முதுநிலைப் பட்டம் பெற்றார்; இவ்வாறாக, அவர், மெட்ராஸ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற ஒரு தகுதிவாய்ந்த மருத்துவராவார்.

(V) மருத்துவர் என்ற அடிப்படையில், அவருடைய எதிர்காலம் மற்றும் நலனைக் கருத்திற்கொண்டு, 1-ஆம் வாதி, அவருடைய தொழிலை மேற்கொள்ளும்வகையில், 2-ஆம் பிரதிவாதி, ஒரு மருத்துவமனையைக் கட்ட முடிவுசெய்தார். எனினும், மருத்துவமனையானது, ஒரு அறக்கட்டளை மருத்துவமனையாகக் கருதப்பட்டது. 2-ஆம் பிரதிவாதி, 9.4.1980-ஆம் தேதியிடப்பட்ட பதிவாவணத்தின் கீழ் பதியப்பட்ட தி/ள். சீதாலஷ்மி சாஉறூவாலா மருத்துவ அறக்கட்டளையான, 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் நிறுவனர் என்ற அடிப்படையில், அறக்கட்டளை ஆவணத்தின் ஒரு நகல் முன்னிலைப்-படுத்தப்பட்டு, அதன் அசலும் மற்றும் பிற ஆவணங்களும் 2-ஆம் பிரதிவாதியிடம் உள்ளன.

(VI) அறக்கட்டளையின் நோக்கங்கள் பிரிவு 1-இல் கூறப்படுகின்றன. அவற்றின் சுருக்கம்: மருத்துவமனைகள், சிகிச்சை அரங்குகள், சுகாதாரப் பயிற்சிகள், நலம்பேணகம் (நர்ஸிங் ஹோம்) மகப்பேறு இல்லங்கள் மற்றும் சிகிச்சை மையம் (டிஸ்பென்சரி) ஆகியவற்றை நிறுவி, நடத்துவதன் மூலம், நிதியுதவி மற்றும் நன்கொடைகள் ஆகியவற்றை நிறுவி பராமரித்தல், வழங்குதல் மற்றும் மருத்துவமனைகளுக்கான சாதனங்களை அளித்தல், கருவிகள் மற்றும் துணை உபகரணங்களை வழங்குதல் போன்றவை.

(VII) தேவையுள்ள குடிமக்களுக்கு மருத்துவ உதவி வழங்கும் நோக்கில், 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளை நிறுவப்பட்டதென 1-ஆம் வாதி நன்மதிப்புடன் கூறினார். தகுதிவாய்ந்த மருத்துவரான 1-ஆம் வாதி, நிறுவனத்தைக் கவனித்து நிர்வகிப்பார் என்பதைக் கருத்திற்கொண்டும், மருத்துவமனை ஒரு பகுதி நலப்பணிக்காகவும் மற்றும் 1-ஆம் வாதிக்காகவும் நடத்தப்பட முடியுமென்றும், சமுதாயத்திலுள்ள மக்களுக்கு சேவைசெய்ய அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்காக 1-ஆம் வாதியின் ஆலோசனையைப் பெறமுடியும் என்றும் இது திட்டமிடப்பட்டது.

(VIII) அறக்கட்டளையின் ஆவணத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நான்கு அறங்காவலர்கள், இரு வாதிகளும், 2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகளுமாவர் என்பதும் மற்றும் அவர்கள் ஆயுட்காலத்திற்கும் நியமிக்கப்பட்டனர் என்பதும் முதன்மையானது ஆகும். பிரிவு 10-இன்படி 2-ஆம் பிரதிவாதி மேலாண் பொறுப்பாட்சியராவார் மற்றும் 1-ஆம் வாதி, இணை மேலாண் பொறுப்பாட்சியராக நியமிக்கப்பட்டார்.

(IX) 9.4.1980-ஆம் தேதியிடப்பட்ட அறக்கட்டளை ஆவணத்தில், 23.3.1981-ஆம் தேதியிடப்பட்ட மற்றொரு ஆவணத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டது. நோக்கங்களுடன் கூடுதலாக, இலவச கல்வி, ஆதரவற்றோர் ஆசிரமங்களை நடத்துதல், ஏழைகளுக்கு உதவுதல் மற்றும் திருமணங்களை நடத்துதல் ஆகிய

நோக்கங்கள் மேலும் சேர்க்கப்பட்டன. ஆனால், இக்கூடுதல் நோக்கங்கள் என்றும் நிறைவேற்றப்படவேயில்லை.

(X) 15.3.1985-ஆம் தேதியிடப்பட்ட மற்றொரு ஆவணத்தின் மூலம் அறக்கட்டளை ஆவணத்தில், மூல நோக்கங்களுடன் தொடர்பில்லாத நோக்கங்கள், மேலும் அறிமுகப்படுத்தப்பட்டன. 24.11.1986-ஆம் தேதியிடப்பட்ட ஒரு பதியப்பட்ட ஆவணத்தின் மூலங்கூட, கடன் வாங்கும் அதிகாரம் அளித்து, அறக்கட்டளை ஆவணத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

(XI) அறக்கட்டளையானது, 8.4.1985-ஆம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் கௌலி ப்ரவுன் சாலையில் 33 சென்ட் நிலத்தை வாங்கி, 1987-88-ஆம் ஆண்டில், ஒரு மருத்துவமனையைக் கட்டி, 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளை மருத்துவமனையாக நிறுவப்பட்டது. 1-ஆம் வாதி, 2003-04-ஆம் ஆண்டு வரையில் மருத்துவமனையைக் கவனித்துக் கொண்டிருந்தார். அதன்பிந்தைய 10 ஆண்டு கால நிகழ்வுகளின் திருப்புமுனையானது கீழே விவரிக்கப்படுகின்றன.....".

4. 2003-04-ஆம் ஆண்டிற்கு பிந்தைய நிகழ்வுகளில் கவனம் செலுத்தப்பட்டது, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் சகோதரரும் எந்தவொரு மருத்துவத் தகுதியோ அல்லது மருத்துவமனையை நடத்தும் எந்தவொரு நிபுணத்துவமோ மற்றும் அறக்கட்டளை நடத்தும் திறனோ பெற்றிராத 4-ஆம் பிரதிவாதி, அறக்கட்டளையைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார் மற்றும்

அறக்கட்டளையின் நோக்கங்கள் நிறைவு செய்யப்படவில்லை; மற்றும் மேல்முறையீட்டாளர்கள் அறங்காவலர் குழுவிலிருந்து நீக்கப்படவிருந்தனர். இறுதியாகக் கூறப்பட்டதாவது:-

"XXI. 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் விவரங்களில் நீதிமன்றம், குறுக்கிடவும் மற்றும் உரியவர்கள் மூலம் அறக்கட்டளையின் நிர்வாகத்திற்கான திட்டங்களை வகுக்கவும் தகுந்த காலம் வந்துவிட்டதென்றும், அதன்மூலம் அறக்கட்டளையின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என்றும் வாதிகள் வாதிட்டனர். பிரதிவாதிகள், அறக்கட்டளைச் சொத்துகள் மற்றும் அறக்கட்டளையின் வருவாயிலிருந்து வாழும்வகையில், பொதுநல அறக்கட்டளையை, பெயரளவு அறங்காவலர்களின் உதவியுடன் தனிப்பட்ட குடும்ப அறக்கட்டளையாக மாற்றிக்கொண்டிருக்கின்றனர். பிரதிவாதிகள், அறக்கட்டளையின் நோக்கங்களைப் புறக்கணித்து, மருத்துவமனையைத் துணிகர வணிகமாக மாற்றுவதன் மூலம், அறக்கட்டளையால் ஈட்டப்பட்ட உண்மையான வருவாயை மறைப்பதன் மூலம் அதனை அபகரித்து தீங்கிழைக்கின்றனர். பின்வரும் காரணங்களுக்காக திட்டம் வகுக்கப்படவேண்டியுள்ளது:

1. அறக்கட்டளையின் நிர்வாகமானது முறையானவர்களின் கைகளில் இருக்கவேண்டும் மற்றும் மருத்துவமானது உரிய

மருத்துவத் தகுதிப்பெற்ற மருத்துவர்களால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

2. 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையினால் நலப்பணி ஏதும் புரியப்படவில்லை மற்றும் கடந்த 5 ஆண்டுகளாக மேற்படி நோக்கங்களுக்காக பொய்யான ஆவணங்கள் உருவாக்கப்படுகின்றன. இலவச மருத்துவ உதவி ஏதும் வழங்கப்படுவதில்லை மற்றும் வழங்கப்படவும் அனுமதிக்கப் படுவதில்லை. 1-ஆம் வாதி மட்டும்தான், நோயாளிகளுக்கு இலவச ஆலோசனை வழங்குகின்றார்.

3. அறக்கட்டளையின் முறையான கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை மற்றும் முறையான கூட்டங்கள் நடத்தப்படுவதற்கான நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில்லை மற்றும் நிகழ்ச்சிக் குறிப்புகள் ஏதும் பதியப்படுவதில்லை.

4. அறக்கட்டளையினால் பெறப்படும் உண்மையான வருவாய் கணக்கு வைக்கப்படுவதில்லை மற்றும் இது, 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் சொந்தப் பயன்பாட்டிற்காகச் சிறுக சிறுக கையாடல் செய்யப்படுகிறது. வசூலிக்கப்படும் பணமானது உடனடியாக அடுத்த நாளன்று வைப்பீடு செய்யப்படுவதில்லை. ஆனால் 4-ஆம் பிரதிவாதியால் பயன்படுத்தப்படுகிறது.

5. அறங்காவலர்கள், 2 மற்றும் 4-ஆம் பிரதிவாதிகளின் மனம்போனபோக்கில் நியமிக்கப்பட்டு, அகற்றப்படுகின்றனர் மற்றும் ஜனநாயக முறை பின்பற்றப்படுவதில்லை.

6. 4-ஆம் பிரதிவாதி லஞ்சம் கேட்டு பல்வேறு தொகைகள் பெறுவதாக மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளிடமிருந்து அடிக்கடி முறையீடுகள் எழுகின்றன மற்றும் 4-ஆம் பிரதிவாதியின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவருடைய வழிகளைத் திருத்திக்கொள்ளப் பணித்து, மருத்துவமனையின் நற்பெயரைப் பாதுகாக்குமாறு 1-ஆம் வாதிக்கு தகவல் அளிக்கப்பட்டது.

7. பிரதிவாதிகள், தினசரி மருத்துவமனைக்கு வந்து கண்காணிப்பதில்லை. 1-ஆம் வாதி, மருத்துவமனையின் நிர்வாகம் மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் பங்கேற்பதினின்று தடைசெய்யப்படுகிறார். முறையான கணக்குகள் பராமரிக்கப்படுவதில்லை.

8. இவ்வாறாக, பிரதிவாதிகள், தவறான மேலாண்மை மற்றும் அபகரித்தல் ஆகிய குற்றங்கள் புரிந்தவர்களாகின்றனர் மற்றும் அவர்கள் நம்பிக்கைத் துரோகம் இழைத்த குற்றம் புரிந்தவர்களாகின்றனர் மற்றும் அவர்கள் பதவி வகிக்கும் தகுதியற்றவர்களாகின்றனர். 8-ஆம் பிரதிவாதி, 1-ஆம் பிரதிவாதியின் அறக்கட்டளையின் கணக்கைப் பராமரிக்கும்

வங்கியாவார் மற்றும் 1-ஆம் பிரதிவாதி, 8-ஆம் பிரதிவாதியிடம் கணக்கு வைத்துள்ளார். இவ்வாறாக, கணக்குப் பராமரிப்பு மற்றும் பணம் பெறுதல்களை 8-ஆம் பிரதிவாதி நிர்வகிப்பதால், அவர் ஒரு முறையான தரப்பினராவார்."

5. இச்சூழ்நிலைகளில், மேல்முறையீட்டாளர்கள், மேற்படி வழக்கில் பின்வரும் பரிகாரங்களை வேண்டுகின்றனர்:-

"அ) தி/ள். சீதாலஷ்மி சாஉறுவாலா மருத்துவ அறக்கட்டளையான 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் நிர்வாகத்திற்கான முறையான திட்டத்தை வகுத்து, 2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளை அறக்கட்டளையிலிருந்து நீக்கி, 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் முறையான மற்றும் ஆக்கப்பூர்வ நிர்வாகத்திற்காக, 1-ஆம் வாதி உட்பட பொதுமக்களிலிருந்து மருத்துவத் தகுதி வாய்ந்தவர்களை புதிய அறங்காவலர்களாக நியமித்தல், புதிதாக நியமிக்கப்படவுள்ள அறங்காவலர்களிடம் 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் சொத்துகளை ஒப்படைத்தல்.

ஆ) 6-ஆம் பிரதிவாதியின் அறங்காவலர் நியமனமானது, இல்லாததும் மற்றும் சட்டவிரோதமானதுமாகும் என அறிவித்து 6-ஆம் பிரதிவாதி, 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் அறங்காவலராக

செயல்படுவதிலிருந்து தடைசெய்யும் பின்விளைவான நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கவேண்டும்.

இ) அறக்கட்டளைக் குழுவிலிருந்து 1-ஆம் வழக்காளரை நீக்கும் நடைமுறையானது இல்லாததும், சட்ட விரோதமானதும் மற்றும் தீய எண்ணத்திலுமானதுமாகும் என அறிவிக்கவும், அறக்கட்டளைக் குழுவிலிருந்து வாதிகளை நீக்குதல் அல்லது நீதிமன்றத்தின் அனுமதியின்றி அறக்கட்டளையை மாற்றியமைத்தல் ஆகியவற்றிலிருந்து 2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளைத் தடைசெய்யும் பின்விளைவான நிரந்தர உறுத்துக்கட்டளையை பிறப்பித்தல்.

ஈ) பிரதிவாதிகள், 7-ஆம் பிரதிவாதியை அறங்காவலராக நியமிப்பதிலிருந்து, தடைசெய்யும் மற்றும் 7-ஆம் பிரதிவாதி, 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் அறங்காவலராக செயல்படுவதிலிருந்து தடைசெய்யும், பின்விளைவான நிரந்தர உறுத்துக்கட்டளையைப் பிறப்பிக்கவேண்டும்.

உ) 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் கணக்குகள் தனியொரு பட்டயக் கணக்கரால் தணிக்கை செய்யப்படவும் மற்றும் 2 மற்றும் 4-ஆம் பிரதிவாதிகள், 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளைக்கு செலுத்தவேண்டியதாக அறியப்படும் ஏதேனும் நிலுவைத் தொகையைச் செலுத்தவும் பணிக்கவேண்டும்.

ஊ) 1-ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் சொத்துகளைப் பொறுப்பிலெடுக்கக் காப்பாளரை நியமித்து, அவற்றை நிர்வகித்து மற்றும் அவற்றை திட்டத்தின்படி நியமிக்கப்படும் அறங்காவலர்களிடம் ஒப்படைக்கவேண்டும்.

எ) வாதிகளுக்கு செலவுத்தொகையை வழங்கவேண்டும்.

ஏ) மாண்புமிகு நீதிமன்றமானது, வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப, உகந்ததாகக் கருதும் பிற பரிகாரங்களை வழங்கவேண்டும்."

6. மேற்படி வழக்குடன், இதன்பின்னர் 'சட்டம்' என சுருங்க அழைக்கப்படும் 1908-ஆம் ஆண்டைய உரிமையியல் விசாரணைமுறைச் சட்டப்பிரிவு 92-இன் கீழ் வழக்குத் தொடர அனுமதி கோரி, மேல்முறையீட்டாளர்களால் வ.வி. எண் 1416/2012 தாக்கல் செய்யப்பட்டது. கோயம்புத்தூர், மாவட்ட நீதிபதி 31.7.2012-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் சட்டப்பிரிவு 92-இன் கீழ் அனுமதி வழங்கினார். அதன்பின்னர், உடனடியாக 31.7.2012-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் வழங்கப்பட்ட அனுமதியை நீக்கக்கோரி, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் வ.வி. எண் 1435/2012-ஐ தாக்கல் செய்தார். இதற்கிடையில், விண்ணப்பத்திற்காதரவாக, அத்தகைய அனுமதி வழங்குவதற்கான முறையான காரணத்தை விண்ணப்பமோ அல்லது உறுதிமொழி ஆவணமோ தெரிவிக்கவில்லை எனக் கூறப்பட்டு வழக்கு நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் வழக்குமூலத்தை நிறுவியுள்ளனர். எனவே, ஏற்கெனவே வழங்கிய அனுமதியை நீக்கவேண்டியத் தேவையில்லையென மாவட்ட நீதிபதி, 27.11.2012-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் தீர்ப்பளித்தார்.

மாவட்ட நீதிமன்றமானது, இவ்வாறாகக் கூறி, வ.வி. எண் 1435/2012-ஐ தள்ளுபடி செய்தது:

> "18. வழக்குரையின் பத்தி 18-இல், 4-ஆம் பிரதிவாதி, தன்னுடைய வாழ்வாதாரத்தை ஈட்டுவதற்காக மருத்துவமனையை நடத்துகின்றார் மற்றும் தன்னுடைய சொந்தப் பயன்பாட்டிற்காக, அதன் வருவாயைக் கையாடல் செய்கின்றார் என்ற குற்றச்சாட்டு உள்ளது. கடந்த பல்லாண்டுகளாக, அறங்காவலர்களின் கூட்டம் ஏதும் நடத்தப்படவேயில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது.
>
> மருத்துவமனையை நிர்வகிக்க, பிரதிவாதிகள் தகுதி வாய்ந்தவர்களல்லர். அறக்கட்டளை ஆவணத்திலுள்ள விதிகளை மீறி, 6-ஆம் பிரதிவாதி, அறங்காவலராக நுழைக்கப்பட்டார் என பத்தி 9-இல் குற்றஞ்சாட்டப்பட்டது. தணிக்கையரை நியமிக்கவும், கணக்குகளைச் சமர்ப்பிக்கவும் கூட்டம் ஏதும் நடத்தப்படவில்லை.
>
> ... ...
>
> 20. ... கையிலுள்ள இவ்வழக்கில், ஒப்புக்கொண்டவகையில், 1-ஆம் வாதி ஒரு மருத்துவராவார். அவருடைய கல்வித் தகுதியானது, முதுநிலை அறுவை சிகிச்சை நிபுணத்துவமாகும். 2-ஆம் வாதி அவருடைய மனைவியாவார். அவர்கள் அறக்கட்டளையின் முதல் அறங்காவலர்களாவர். அவர்கள் அறக்கட்டளையில் அக்கறையுள்ளவர்கள் என பாதுகாப்பாக முடிவு

செய்யப்படமுடியும். எனவே, வழக்கானது பொறுப்பற்ற நபர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதெனக் கூறப்படமுடியாது. ஒப்புக்கொண்டவகையில், அறக்கட்டளையானது பொது நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது. அறக்கட்டளையின் நோக்கங்கள் எந்தவித அடிப்படையுமின்றி திருத்தப்பட்டுள்ளன என்பது நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. திருத்தத்தின் செல்லத்தக்கமையானது, விசாரணைக்குப் பின்னர் கருத்திற்கொள்ளப்படமுடியும். அதுபோன்று, அறங்காவலர்கள் நியமனம் தொடர்பான திருத்தமுங்கூட, விசாரணையின் முடிவின் பின்னர் விவாதிக்கப்படமுடியும். **"வி. இராஜசேகரன் -எதிர்- எம். இராஜேந்திரன்"**[1] என்ற வழக்கில் இவ்வாறாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது:

> "உறுதியான வழக்கு நிறுவப்பட்டாலன்றி, சாதாரணமாக நீதிமன்றம் அனுமதி வழங்கவேண்டும். அதன்மூலம் வினாவானது, சான்றுகள் பதியப்பட்டப் பின்னர் ஆழ்ந்து பரிசீலிக்கப்படமுடியும்."

... ...

21. பொதுநல அறக்கட்டளையானது நிலைத்திருக்கக்கூடியது மற்றும் நீதிமன்றம் அதன் பாதுகாவலராகும் என்பது நன்கு தீர்வுசெய்யப்பட்டதாகும். வழக்கின் மொத்த பொருண்மைகள்

---

1. (2007) 1 எம்.எல்.ஜே. 683

மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்தவரையில், வாதிகள் வழக்கு மூலத்தை நிறுவியுள்ளனர் என நான் முடிவு செய்கின்றேன். எனவே, வழக்குத் தொடர இந்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அனுமதியானது நீக்கப்படமுடியாது. அதற்கிணங்க, கருத்திற்கு பதிலளிக்கப்படுகிறது."

7. எதிர்மேல்முறையீட்டாளர், உரிமையியல் சீராய்வு மனு, உ.சீ.ம. எண் (நிலுவை) 2708/2013-ஐ தாக்கல் செய்வதன் மூலம், மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்துரைத்தார். அதன்பின்னர், உடனடியாக 10.8.2012-ஆம் தேதியிடப்பட்ட அறக்கட்டளையின் துணை ஆவணத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திருத்தமானது, இல்லாததும் மற்றும் சட்டவிரோதமானதுமாகும் என அறிவிக்கப்படும் அறிவிப்பு தீர்ப்பாணையைக் கோரி மேல்முறையீட்டாளர்கள் மற்றும் அவர்களுடைய இரண்டு மகன்களால் மற்றொரு அசல் வழக்கான 1415/2013 தாக்கல் செய்யப்பட்டது. நாங்கள் தற்பொழுது மேற்கூறப்பட்ட அசல் வழக்கு எண் 1415/2013-ஐ குறித்து கவலைப்படவில்லை.

8. வழக்கு தாக்கல் செய்யப்பட்டது மேல்முறையீட்டாளர்களின் தனிப்பட்ட உரிமைகளை நியாயப்படுத்தப்படுவதற்கானது, உ.வி.மு.ச., பிரிவு 92-இன் கீழான அனுமதியானது வழங்கப்பட்டிருக்கக் கூடாதென்றும், வாதங்களை ஏற்று உயர் நீதிமன்றமானது 30.4.2019-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் மேற்படி சீராய்வு மனுவை அனுமதித்தது. உயர் நீதிமன்றத்தினால் கீழ்க்காணுமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது:

"22. மேற்படி தீர்ப்பிலிருந்து உ.வி.மு.ச., சட்டப்பிரிவு 92-இன் கீழான முதன்மையான நோக்கங்கள், பொதுநல அறக்கட்டளைகள், அறஞ்சார்ந்த நிறுவனங்கள், ஆன்மீகத் தன்மைவாய்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றை அவற்றுக்கு எதிராக வழக்குத் தொடுத்து துன்புறுத்துதலிலிருந்து பாதுகாத்தல் அல்லது வழக்குரையின் கூற்றுகளின் அடிப்படையில் ஏதேனும் பணித்தல் (உத்தரவு) பெறுவதற்கான தேவையுள்ளதா? என்பதை நீதிமன்றம் பார்த்துக்கொள்வதாகும். நம்பிக்கைத் துரோகமானது உறுதிப்படுத்தப்படவில்லையெனில், வழக்கின் அடிப்படையானது தனிநபர் உரிமையைச் சார்ந்ததாகும்; உ.வி.மு.ச., பிரிவு 92-இன் கீழ் அனுமதி வழங்கப்படமுடியாது. அதுபோன்று, நீதிமன்றமுங்கூட, பரிகாரம், வாதி வழக்கு தொடுத்திருக்கும் தகுதி மற்றும் வழக்கு தொடரப்பட்ட நோக்கம் ஆகியவற்றிற்கப்பால் செல்லமுடியும். வழக்கானது சட்டப்பிரிவு 92-இன் வரம்பிற்குள் வருகிறதா? என்பது வழக்குரையின் விவரங்களில் முதலில் கவனிக்கப்படவேண்டியது என்பது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளிலிருந்து தெளிவாகிறது.

23. மேற்படி நன்கு தீர்வுசெய்யப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து வழக்கானது, பொது உரிமையை நிலைநாட்ட தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? அல்லது தனிப்பட்ட உரிமையை நிலைநாட்ட தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்பதையே நாம் தற்பொழுது பார்க்கவேண்டியுள்ளது. அறக்கட்டளையானது,

அறநலப் பணிக்கானது என்பதில் ஐயமேதுமில்லை. வழக்குரையின் விவரங்களிலிருந்து கவனிக்கப்படவேண்டியது யாதெனில், வழக்கானது பொது உரிமையை நிலைநாட்டுவதற்கானதா? அல்லது தனிப்பட்ட உரிமையை நிலைநாட்டுவதற்கானதா? என்பதாகும். வழக்குரையின் பத்தி 5-ஐ முழுமையாக வாசித்ததில், 1-ஆம் வாதி, அவருடைய தொழிலை நடத்தும்பொருட்டு, 2-ஆம் பிரதிவாதி, மருத்துவமனையைக் கட்ட முடிவுசெய்தார் என்பது 1-ஆம் வாதியின் வாதமாகும். எனினும், மருத்துவமனையானது ஒரு அறநலப் பணி மருத்துவமனையாகக் கருதப்பட்டது. வழக்குரையின் பத்தி 7-இல், 1-ஆம் வாதி தன்னுடைய ஆலோசனையை வழங்கி, சமுதாயத்திற்கு சேவைசெய்ய, நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்பது வாதியின் வாதமாகும். வாதி, 2003 மற்றும் 2004-ஆம் ஆண்டு வரையில் மருத்துவமனையை கவனித்துக் கொண்டிருந்தார். 4-ஆம் பிரதிவாதி எவ்வாறு அறக்கட்டளையில் நுழைக்கப்பட்டார் என்பது பத்தி 11 மற்றும் 12-இல் வாதிடப்படுகிறது; 2003 மற்றும் 2004 வரையில், வாதி மருத்துவமனையின் நிர்வாகத்தை கவனித்துக்கொண்டிருந்த-பொழுதிலும், 4-ஆம் பிரதிவாதி, மெல்ல அதிகாரங்களைத் தவறாக கைப்பற்றத்துவங்கி, இணை மேலாண்மை அறங்காவலரானதைக் குறித்து பத்தி 13-இல் வாதிடப்படுகிறது.

2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகள் சுதந்திரமாக முடிவெடுக்க 4-ஆம் பிரதிவாதி அனுமதிப்பதில்லையென பத்தி 13-இல் மேலும் குற்றஞ்சாட்டப்படுகிறது. 4-ஆம் பிரதிவாதி, வாடகையின் ஒரு பகுதியைப் பணமாகப் பெற்று, தன்னுடைய சொந்த செலவினங்களுக்கு பயன்படுத்திக்கொள்கிறார் என பத்தி 14-இல் கூறப்படுகிறது. வழக்குரையின் பத்தி 15-இல், 1-ஆம் வாதியின் மருத்துவத் தொழிலுக்காக கருதப்பட்ட மருத்துவமனையின் விடயங்களை 4-ஆம் பிரதிவாதி கவனித்து வந்துள்ளார் என்பது 1-ஆம் வாதியின் வாதமாகும். உண்மையில், வாதி, 2003-2004-ஆம் ஆண்டில் மருத்துவமனையைக் கவனித்துவந்தார் என்ற அவருடைய முந்தைய வாதத்திற்கு இது முரணானதாகும். பிரதிவாதிகள், 3-ஆம் பிரதிவாதியின் மகள் மற்றும் மனைவி ஆகியோரை அறக்கட்டளையில் நுழைத்துள்ளனர் என்பதையும், 9.8.2012 அன்று நடத்தப்படவிருந்த கூட்டத்திற்காக, 23.7.2012-ஆம் தேதியிடப்பட்ட நிகழ்ச்சி நிரலானது சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டது என்பதையும், ஒட்டுமொத்த வாதுரையானது தெளிவாகத் தெரிவிக்கிறது."

9. உயர் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்தை எதிர்த்தும் இம்மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. கே.வி. விஸ்வநாதன் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான

கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. குரு கிருஷ்ண குமார் ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

10. இவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள அடிப்படைப் பிரச்சினை யாதெனில், மேல்முறையீட்டாளர்களுக்கு, பிரிவு 92-இன் கீழ் விசாரணை நீதிமன்றத்தின் முன் சரியாகவே அனுமதி வழங்கப்பட்டதா? என்பதாகும். கீழ்க்காணும் விளைவுடைய பிரிவு 92-இன் தொடர்புடைய விதிகளை நாங்கள் குறிப்பிடுகின்றோம்:-

> "92. **பொது அறநிலைய நிறுவனங்கள்.-** (1) அறநலப் பணி அல்லது ஆன்மீகத் தன்மையுடைய பொது நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட வெளிப்படையான அல்லது ஆக்கப்பூர்வமான அறக்கட்டளையின் நம்பிக்கையானது மீறப்படும்பட்சத்தில், அத்தகைய அறக்கட்டளையின் நிர்வாகத்திற்காக நீதிமன்றத்தின் பணித்தல் தேவையெனக் கருதப்படுகிறதா? என்பது குறித்து, அரசு தலைமை வழக்குரைஞரோ அல்லது அறக்கட்டளையின் நலனில் அக்கறையுள்ள மற்றும் நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், வழக்கானது சர்ச்சைக்குரியதாயினும் அல்லது இல்லையெனினும் அதுகுறித்துத் தீர்ப்பாணைப்பெற முதல் சட்டவரம்புடைய முதன்மை உரிமையியல் நீதிமன்றத்திலோ அல்லது அறக்கட்டளையின் மொத்த அல்லது பகுதி வழக்குமூலம் அமைந்துள்ள நிலச் சட்டவரம்புடைய, மாநில அரசினால்

அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வேறு நீதிமன்றத்திலோ வழக்குத் தொடரலாம்-

(அ) ஏதேனும் அறங்காவலர்களை நீக்குதல்;

(ஆ) ஒரு புதிய அறங்காவலரை நியமித்தல்;

(இ) ஒரு அறங்காவலரிடம் ஏதேனும் சொத்தை ஒப்படைத்தல்;

(இஇ) நீக்கப்பட்டுள்ள அறங்காவலர் அல்லது அறங்காவலர் பதவி முடிவுற்றிருக்கும் நபரை, தன்னுடைய அனுபவத்திலுள்ள அறக்கட்டளைச் சொத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவரிடம் ஒப்படைக்கப் பணித்தல்;

(ஈ) கணக்கு விசாரணைக்குப் பணித்தல்;

(உ) அறக்கட்டளை சொத்தின் எந்த பகுதி அல்லது நலனானது, அறக்கட்டளையின் எந்த நோக்கிற்காக ஒதுக்கப்படுகிறது என்பதை அறிவித்தல்;

(ஊ) ஒட்டுமொத்த அறக்கட்டளை சொத்து அல்லது அதன் ஒரு பகுதியானது வாடகைக்கு விடப்படவும், விற்கப்படவும், அடகு

வைக்கப்படவும் அல்லது பரிவர்த்தனை செய்யப்படவும் அங்கீகரித்தல்;

(எ) ஒரு திட்டத்தை இறுதி செய்தல்; அல்லது

(ஏ) வழக்கின் தன்மைக்கேற்ப உரிய பிற பரிகாரம் வழங்குதல்.

(2) 1863-ஆம் ஆண்டைய (20/1863) ஆன்மீக அறநிலையச் சட்டத்தின்படியோ அல்லது 'ஆ' பிரிவு மாநிலங்களில், 1956-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் தேதிக்கு முன்பு நடைமுறையிலிருந்த தொடர்புடைய சட்டத்தின்படியோ, துணைப்பிரிவு 1-இன் விதிகளுக்கிணங்கினாலன்றி, அத்துணைப்பிரிவில் குறிப்பிட்ட பரிகாரங்கள் எதையும் கோரி, வழக்கேதும் தொடரப்படமுடியாது.

(3) ....."

11. அன்றிருந்த பிரிவு 92(1)-ஐ பரிசீலிக்கையில் **தலைவர் மடப்பா -எதிர்- எம்.என். மஉறாந்ததேவாரு மற்றும் பலர்**[2] என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வானது கீழ்க்காணுமாறு கருத்துத் தெரிவித்தது:-

"... பிரிவு 92(1) இரு பிரிவுகளிலான வழக்குகளுக்கு வழிசெய்கிறது, அதாவது, (i) பொதுநல நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட அறநலப் பணி அல்லது ஆன்மீகப் பணிகளுக்கான

---

2. (1966) 2 எஸ்.சி.ஆர். 151

அறக்கட்டளையில் நம்பிக்கைத் துரோகம் இருக்குமிடத்து, மற்றும் (ii) அத்தகைய ஏதேனும் அறக்கட்டளையின் நிர்வாகத்திற்காக, நீதிமன்றத்தின் பணித்தல் (உத்தரவு) தேவையெனக் கருதப்படுமிடத்து, அறநலப் பணி அல்லது ஆன்மீகப் பணியின் பொதுநல அறக்கட்டளைகள், அவற்றிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு, துன்புறுத்தப்படுவதினின்று அவற்றைக் காப்பதே, பிரிவு 92(1)-இன் முதன்மை நோக்கமாகும். அதனால்தான், அப்பிரிவின் கீழான வழக்கானது, அரசு தலைமை வழக்குரைஞராலோ அல்லது அறக்கட்டளை நலனில் அக்கறையுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், அரசு தலைமை வழக்குரைஞரின் ஒப்புதலை எழுத்து வடிவில் பெற்றப்பின்னரே வழக்கானது தாக்கல் செய்யப்படமுடியும். அரசு தலைமை வழக்குரைஞர் வழக்கைத் தாக்கல் செய்யும் முன்னர் அல்லது பிரிவு 92-இன் கீழ் வழக்கைத் தாக்கல் செய்ய தன்னுடைய ஒப்புதலை அளிக்கும் முன்னர், நம்பிக்கைத் துரோகம் இருப்பதாகவோ அல்லது அறக்கட்டளையின் நிர்வாகத்திற்காக நீதிமன்றத்தின் பணித்தல் தேவையெனக் கருதப்படுவதாகவோ அவர் திருப்தியுறவேண்டும். பிரிவு 92(1)-இன் கீழான வழக்கில் நாடப்படவேண்டிய பரிகாரங்கள், அப்பிரிவிலேயே தெரிவிக்கப்படுகின்றன மற்றும் ஏதேனும் அறங்காவலரை நீக்குதல், ஒரு புதிய அறங்காவலரை நியமித்தல், ஒரு அறங்காவலரிடம் ஏதேனும் சொத்தை

ஒப்படைத்தல், நீக்கப்பட்டுள்ள அறங்காவலர் அல்லது அறங்காவலர் பதவி முடிவுற்றிருக்கும் நபரை, தன்னுடைய அனுபவத்திலுள்ள அறக்கட்டளைச் சொத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவரிடம் ஒப்படைக்கப் பணித்தல், கணக்கு விசாரணைக்குப் பணித்தல், அறக்கட்டளைச் சொத்தின் எந்த பகுதி அல்லது நலனானது அறக்கட்டளையின் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்படுகிறது என்பதை அறிவித்தல், ஒட்டுமொத்த அறக்கட்டளைச் சொத்து அல்லது அதன் ஒரு பகுதியானது வாடகைக்கு விடப்படவும், விற்கப்படவும், அடகு வைக்கப்படவும் அல்லது பரிவர்த்தனை செய்யப்படவும் அங்கீகரித்தல், ஒரு திட்டத்தை இறுதி செய்தல் அவற்றை உள்ளடக்குகிறது. நம்பிக்கைத் துரோகம் இருக்கும்பொழுதும் அல்லது பொதுவாக அறக்கட்டளையின் நிர்வாகத்தின் முன்னேற்றம் தேவைப்படும்பொழுதும், பிரிவு 92-இன் கீழான வழக்கு தாக்கல் செய்யப்படலாமென்பதை இப்பரிகாரங்களின் தன்மைத் தெரிவிக்கும். ... ..."

12. அவ்வாறு வகுத்துரைக்கப்பட்ட சட்ட உரையானது:-

அ) **பிஷ்வநாத் மற்றும் ஒருவர் -எதிர்- ஸ்ரீ தாகூர் ராதாபல்லாப்ஜி மற்றும் பலர்**[3] என்ற வழக்கில் கூறப்பட்டதாவது:-

---

3. (1967) 2 எஸ்.சி.ஆர். 618

"உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 92-ஐ பயன்படுத்த, மூன்று நிபந்தனைகள் நிறைவு செய்யப்படவேண்டுமென்பது, வகுக்கப்பட்ட சட்டமாகும்; அவை, (i) அறக்கட்டளையானது, அறநலப் பணி அல்லது ஆன்மீகப் பணிக்கான, பொது நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகிறது; (ii) நம்பிக்கைத் துரோகம் இருந்தது அல்லது அத்தகைய அறக்கட்டளையின் நிர்வாகத்தில், நீதிமன்றத்தின் பணித்தலின் தேவை இருந்தது; (iii) கோரப்படும் பரிகாரமானது, அதில் கூறப்பட்டுள்ள பரிகாரங்களுள் ஒன்றாக அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும். 3 நிபந்தனைகளுள் யாதொன்றும் நிறைவு செய்யப்படவில்லையெனில், அவ்வழக்கானது மேற்படி பிரிவிற்கு அப்பாற்பட்டதாகிவிடும். ... ..."

ஆ) **சுக்ரா பீபி -எதிர்- உறாஜி கும்மு மியா**[4] என்ற வழக்கில் கூறப்பட்டதாவது:-

"மூன்று நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டாலன்றி, இப்பிரிவு பொருந்தாதென்பது சான்றாகிறது: (1) இவ்வழக்கானது, பொது அறநலப் பணி நிறுவனத்துடனோ அல்லது ஆன்மீகப் பணி அறக்கட்டளையுடனோ தொடர்புடையதாக இருக்கவேண்டும். (2) வழக்கானது, நம்பிக்கைத் துரோக குற்றச்சாட்டு அல்லது அறக்கட்டளையின் நிர்வாகத்திற்காக நீதிமன்றத்தின் பணித்தல்

---

4. (1969) 3 எஸ்.சி.ஆர். 83

தேவைப்படுவதாகவோ ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் *(3)* கோரப்படும் பரிகாரங்கள் பிரிவில் கூறப்பட்டவையாக இருக்கவேண்டும்."

13. பிரிவு *92*-ஐ பயன்படுத்தவும் மற்றும் அப்பிரிவின்கீழ் வழக்குத் தொடரவும், மூன்று நிபந்தனைகள் நிறைவு செய்யப்படவேண்டும், அவை,

(i) வினாவிற்கிடமான அறக்கட்டளையானது அறநலப் பணி அல்லது ஆன்மீகப் பணிக்கான பொது நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகிறது;

(ii) நம்பிக்கைத் துரோகம் இருந்தது அல்லது அத்தகைய அறக்கட்டளையின் நிர்வாகத்தில் நீதிமன்றத்தின் பணித்தலின் தேவை இருந்தது; மற்றும்

(iii) கோரப்படும் பரிகாரமானது, மேற்படி பிரிவில் கூறப்பட்டுள்ள பரிகாரங்களுள் ஒன்றாக அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும்.

அதன்விளைவாக, இம்மூன்று நிபந்தனைகளுள் ஏதேனும் நிறைவு செய்யப்பட-வில்லையெனில், வழக்கானது, மேற்படி பிரிவின் வரம்பிற்கப்பாற்பட்டதாகிவிடும்.

14. தற்பொழுதைய வழக்கில், தொடர்புடைய அறக்கட்டளையானது, அறநலப் பணிக்கான பொது நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டதென ஒப்புக்கொள்ளப் படுகிறது. அவ்வழக்கானது, ஐயத்திற்கப்பாற்பட்டதாகும். இரண்டாம் நிபந்தனையைப் பொறுத்தவரையில், பொதுநோக்கு அறப்பணிக்கான அறக்கட்டளையானது, தனிப்பட்ட குடும்ப அறக்கட்டளையாக நடத்தப்படுவதை வழக்குரையின் பத்தி *21*

தெரிவிக்கிறது; அறக்கட்டளையின் நோக்கம் புறக்கணிக்கப்படுகிறது மற்றும் தகுதிவாய்ந்த நபர்கள் மூலம் அறக்கட்டளையை நிர்வகிக்க முறையான திட்டம் வகுப்பது தேவையாக இருந்தது. இரண்டாம் நிபந்தனையும் நிறைவு செய்யப்படுகிறது.

மூன்றாம் நிபந்தனையைப் பொறுத்தவரையில், கோரப்படும் பரிகாரங்கள் பல்வகையினதாகின்றன; அவை, நிர்வாகத்தின் திட்டத்தை வகுத்தல், சில அறங்காவலர்களை நீக்குதல் மற்றும் மருத்துவத் தொழில் மற்றும் பொது சேவை ஆகியவற்றிலிருந்து புதிய அறங்காவலர்களை நியமித்தல் மற்றும் சில துணைப் பரிகாரங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. அறக்கட்டளையின் முறையான மற்றும் ஆக்கப்பூர்வ நிர்வாகத்திற்காக, மருத்துவத் தொழில் மற்றும் பொது சேவை ஆகியவற்றிலிருந்து நியமிக்கப்படவேண்டிய அறங்காவலர்களுடன், அறங்காவலர்களுள் ஒருவராக, ஒன்றாம் வாதியும் நியமிக்கப்படவேண்டிய பரிகாரத்தை, வேண்டப்படும் பரிகாரம் உள்ளடக்குகிறதென்பது உண்மையாகும். எனவே, வழக்குரையின் பிற விவரங்களுடன் அத்தகைய பரிகாரமானது, சட்டப்பிரிவு 92-இன் வரம்பிற்கப்பாற்கொண்டு செல்கிறதா? இல்லையா? என்னும் வினா எழுகிறது.

15. **சுக்ரா பீபி**[4] என்ற வழக்கில், வக்பு-ஆனது போதியளவில் பொது நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது மற்றும் அவ்வழக்கில் கோரப்பட்ட பரிகாரங்கள், (i) பிரதிவாதியை முத்வள்ளி பதவியிலிருந்து நீக்கி, அவருடைய இடத்தில் வாதியின் மகனை நியமித்தல் மற்றும் (ii) அந்த மகன் உரிய பருவம் அடையும்வரையில், சொத்துக்காப்பாளரை நியமித்தல். பொருண்மைகளைப் பரிசீலிக்கையில், வக்பு-ஆனது

போதியளவில் பொது நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டவிடத்து, இந்நீதிமன்றம் கருத்துத் தெரிவித்ததாவது:-

> "... ... வக்பு-ஆனது பிரிவு 92-இன் வரம்பிற்குள் வருகிறதா? என்பதை முடிவு செய்ய முறையான ஆய்வானது, வக்பு-ஆனது, உண்மையில் பொது நோக்கிற்காக உருவாக்கப்பட்டதா? என்பதை உ.வி.மு.ச. ஆய்வு செய்யவேண்டியுள்ளது. அந்த ஆய்வை தற்பொழுதைய வழக்கிற்குப்பொருத்தி, உறாஜி ஈலாஉறி பக்ஸ் என்பவரால் 1936-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் தேதியன்று உருவாக்கப்பட்ட வக்பு-ஆனது, உ.வி.மு.ச., சட்டப்பிரிவு 92-இன் வரம்பிற்குள் வருகிறதென நாங்கள் கருதுகின்றோம். *எஸ். மஸ்சிரெட் உறூசைன் -எதிர்- உறூசைன் அஉறமது சௌத்ரி*[5] என்ற வழக்கில் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் மூலம் இக்கருத்து எட்டப்பட்டது. அவ்வழக்கானது வக்புடன் தொடர்புடையது, அதன் ஆண்டு நிகர வருமானம் ரூ.1300/- ஆகும். அதில் ரூ.353, ஆன்மீகத் தன்மைவாய்ந்த அறநலப் பணிக்கான பொது நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டது. அத்தொகையானது, அற்பமானதோ அல்லது பொது சேவைக்கு விகிதாச்சாரமற்றதோ அல்ல என்றும், அதன்விளைவாக, வழக்கானது, உ.வி.மு.ச., சட்டப்பிரிவு 92-இன் கீழ் நிலைக்கத்தக்கதென்றும் அறிவார்ந்த நீதியரசர்களால் தீர்ப்பளிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தினால்

---

5. 1897 எஸ்.சி.சி. ஆன்லைன் கல்கத்தா 42 : (1896-1897) 1 சி.டபிள்யூ.என். 345.

தன்னுடையத் தீர்ப்புரைக்கு ஆதரவாக, *வைத்திய நாத் அய்யர் -எதிர்- வி. சுவாமிநாத அய்யர்*[6] என்ற வழக்கில் நீதியராயத்தின் தீர்ப்புரையானது சார்ந்து நிற்கப்பட்டது; அதில் அறக்கட்டளையின் நிறுவுனர், தன்னுடைய சொத்தின் வருவாயின் 2/3 பகுதியானது தன்னுடைய மனைவிக்குச் செல்லவேண்டுமென்றும், எஞ்சிய 1/3 பகுதியானது, முதலில் சில கடன்களைத் தீர்க்கவும், பின்னர் ஏழை மக்களுக்கு உணவு அளிக்க சத்திரம் நிறுவச்செல்ல வேண்டும் என்றும் தன்னுடைய உயிலின் மூலம் பணித்தார். அவருடைய மனைவியின் மரணத்திற்குப் பின்னர், 2/3 பகுதியானது அறநலப்பணிக்கும் மற்றும் 1/3 பகுதியானது குடும்ப உறுப்பினர்களுக்கும் செல்லவேண்டுமென அவ்வுயிலில் மேலும் ஒரு விதி இருந்தது. இப்பொருண்மைகளின் அடிப்படையில் "நிறுவப்பட்ட அறக்கட்டளையானது பொது நல அறக்கட்டளையாகும்" என்றும், கீழமை நீதிமன்றத்தின் அறிந்தமைக்கு (முடிவிற்கு) நீதியராயம் உடன்பட்டது."

பரிகாரம் கோரப்படும் சூழ்நிலையில், "வழக்கானது, பொதுநல நிறுவனமான அறக்கட்டளையின் உரிமையை மெய்ப்பிக்கவோ அல்லது நிறுவவோ தாக்கல் செய்யப்படவில்லை; ஆனால் தனிநபர் உரிமைமீறலை அல்லது மேல்முறையீட்டாளரின் தனிப்பட்ட உரிமையை மெய்ப்பிக்கவே தாக்கல் செய்யப்பட்டது" என்னும் வாதமானது கீழ்க்காணுமாறு பரிசீலிக்கப்பட்டது:-

---

6. *(1923-24) 51 ஐ.ஏ. 282.*

"... ... கோரப்பட்ட பரிகாரங்களாவன: (1) எதிர்மேல்முறையீட்டாளரை முத்வல்லி பதவியிலிருந்து நீக்கி, அவருடைய இடத்தில், மேல்முறையீட்டாளரின் மகனான தனிநபரை நியமித்தல் மற்றும் (2) அத்தனிநபர் உரிய பருவம் அடையும் வரையில், வக்பு சொத்துகளை நிர்வகிக்க, சொத்துக் காப்பாளரை நியமித்தல். வழக்கின் பொருண்மைகள், ஆன்மீகத் தன்மையுடைய அல்லது அறநலப் பணிக்கான பொதுநல அறக்கட்டளையுடன் தொடர்பானது என்பதும், கோரப்படும் பரிகாரங்கள், உ.வி.மு.ச., சட்டப்பிரிவு 92 உட்பிரிவு (1)-இன் பிரிவுகள் (அ) முதல் (ஏ) வரையிலானவற்றிற்குள் வருவதாலேயே, வழக்கானது பிரதிநிதித்துவ வழக்காக இருந்து, வாதியின் தனிப்பட்ட அல்லது சொந்த உரிமையை நியாயப்படுத்தாமல், பொதுநலனில் தாக்கல் செய்யப்பட்டாலன்றி, பிரிவு 92-இன் செயல்பாட்டை ஈர்க்காது. *பத்ரிதாஸ் -எதிர்- சூனிலால்*[7] என்ற வழக்கில் மாண்புமிகு நீதியரசர் திரு. வுட்ரோ.ப் அவர்களால் கூறப்பட்டது போன்று:

> "அரசு தலைமை வழக்குரைஞர், மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசு அலுவலர்கள் மட்டுமே பொது மக்கள் பிரதிநிதியாக வழக்குத் தொடரமுடியும் என்பதும், இவ்வலுவலர்களுக்கு மாறாக, அறக்கட்டளையின் நலனில் அக்கறையுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட

---

7. ஐ.எல்.ஆர். 33 கல்கத்தா 789

நபர்கள், மேற்படி அலுவலர்களின் ஒப்புதலுடன் வழக்குத் தொடரமுடியும் என்பதும், அவர்கள் பொதுமக்களைப் பிரதிநிதித்துவம்செய்யும் அதிகாரத்தின் கீழ், அறக்கட்டளையின் நோக்கிற்காக வழக்கு தாக்கல் செய்கின்றனர் என்பதும் தெளிவாகிறது. இதிலிருந்து பின்பற்றுவது யாதெனில், பொது நல அறக்கட்டளையின் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களாக உள்ள நபர் அல்லது நபர்கள் பொதுமக்களின் பொது உரிமைகளை நிறுவுவதற்கன்றி, தன்னுடைய தனிப்பட்ட உரிமை மீறலுக்குப் பரிகாரம் காண வழக்குத் தொடர்வது, இப்பிரிவின் கீழ் வராது அல்லது இப்பிரிவின் கீழ் தொடரப்படத் தேவையில்லை."

இக்கோட்பாடானது விவேகமானதாக, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வினால் *அப்பண்ணா -எதிர்- நரசிக்னா*[8] என்ற வழக்கில் ஏற்கப்பட்டது. அவ்வழக்கில் வழக்கானது, பொதுநல ஆன்மீகப் பணி அறக்கட்டளையின் அறங்காவலரால் கணக்கு வழக்கிற்காக சக அறங்காவலர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டது. கோரிக்கையானது, வாதியான அறங்காவலரால் மற்றொரு அறங்காவலர்களுக்கெதிராக முற்றிலும் தன்னுடைய

---

8. ஐ.எல்.ஆர். 45 மெட்ராஸ் 113

சொந்த உரிமையை நிலைநாட்டுவதற்கானதால், வழக்கானது, உ.வி.மு.ச., சட்டப்பிரிவு 92-இன் வரம்பிற்குள் வராதென முழு அமர்வு தீர்ப்பளித்தது. *திருமலை-திருப்பதி தேவஸ்தானக் குழு -எதிர்- உடையார் கிருஷ்ணய்யா செண்பாகலி*[9] என்ற வழக்கில் அதே கருத்தானது, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தினால் பின்பற்றப்பட்டது. இவ்வழக்கில், பொது அறங்காவலர்கள் சார்பாக பிற அறங்காவலர்கள் வசூலித்தப் பணத்தை ஒப்படைக்கவும் மற்றும் கணக்கு வழக்குகளை விசாரணைக்குப் பணிக்கவும் தீர்ப்பாணை வேண்டி, பொதுக் கோயிலின் பொது அறங்காவலர்கள், பிற அறங்காவலர்களுக்கெதிராக வழக்கு தொடுத்தனர். பணம் வசூலிக்கும் உரிமையானது முற்றிலும் உ.வி.மு.ச., சட்டப்பிரிவு 92-ஐ சாராதது மற்றும் வழக்குத் தொடர, அரசு தலைமை வழக்குரைஞரின் அனுமதி தேவையில்லையென தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிமன்றத்தின் தீர்ப்புரையை அளித்த மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு. லீச் அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்:

> "தற்பொழுதைய வழக்கில் கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களைக் கேட்டப்பின்னர், *சண்முகம் செட்டி -எதிர்- கோவிந்தா செட்டி*[10] என்ற வழக்கில் கூறப்பட்டுள்ள எதனுடனும் உடன்படாமைக்கு, நாங்கள் காரணம்

---

9. ஐ.எல்.ஆர். (1943) மெட்ராஸ் 619.
10. ஐ.எல்.ஆர். 1938 மெட்ராஸ் 39.

எதையும் அறியவில்லை. மறுபுறம், வழக்கானது பிரிவு 92-இன் வரம்பிற்குள் வருகிறதா? என்பதை முடிவு செய்வதில், நீதிமன்றமானது பரிகாரங்களுக்கப்பால் சென்று, வாதிகள் வழக்குத் தொடரும் தகுதி மற்றும் வழக்குத் தொடரப்படுவதற்கான நோக்கம் ஆகியவற்றை கவனிக்கவேண்டும் என்ற மாண்புமிகு நீதியரசர் திரு. வரதாசாரியார் அவர்களின் கருத்துடன் நாங்கள் முழுமையாக உடன்படுகின்றோம். *அப்துர் ரஉறீம் -எதிர்- முகமது பர்கத் அலி*[11] என்ற வழக்கில் அரச நீதிப்பேரவையால் வழங்கப்பட்ட தீர்ப்புரையானது, *ஜானகிபாய் -எதிர்- திருசிற்றம்பல விநாயகர்*[12] என்ற வழக்கில் முழு அமர்வினால் தெரிவிக்கப்பட்ட கருத்தை ஆதரிக்கவில்லை."

இத்தீர்ப்புரைகளில் வகுக்கப்பட்ட கோட்பாடுகளைப் பொருத்தி, தற்பொழுதைய வழக்கில், மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது, வக்புவின் அனைத்துப் பயனாளிகளின் தரப்பிலும் பிரதிநிதியாக தாக்கல் செய்யப்பட்டதாகவே கருதப்படவேண்டுமென நாங்கள் கருதுகின்றோம். நாங்கள் ஏற்கெனவே கூறியதுபோன்று, உறாஜி ஈலாஉறி பக்ஸ் என்பவரால் உருவாக்கப்பட்ட வக்பு ஆனது, அறநலப் பணி அல்லது ஆன்மீகப்

---

11. (1927) ஐ.எல்.ஆர். 55 கல்கத்தா 519 (பி.சி.)
12. (1935) ஐ.எல்.ஆர். 58 மெட்ராஸ் 988 (எப்.பி.)

பணிக்கான பொதுநல நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட வக்பு ஆகும். இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரால் கோரப்படும் பரிகாரங்கள், தனிப்பட்ட உரிமைகளைச் செயல்படுத்துவதற்கான பரிகாரங்களல்ல, ஆனால், பிரதிவாதியை அறங்காவலர் பொறுப்பிலிருந்து நீக்கி, அவருடைய இடத்தில் புதிய அறங்காவலரை நியமிப்பதற்கான பரிகாரங்களாகும். மேல்முறையீட்டாளரால் கோரப்படும் பரிகாரங்கள், உ.வி.மு.ச., சட்டப்பிரிவு 92(1)-இன் (அ) மற்றும் (ஆ) உட்பிரிவுகளுள் வருகின்றன மற்றும் மேல்முறையீட்டாளரால் கோரப்படும் இப்பரிகாரங்கள், மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது தனிப்பட்ட தன்மையிலானதல்ல என்பதையும், ஆனால் வக்பு சொத்தின் அனைத்துப் பயனாளிகளுக்கும் பிரதிநிதித்துவமானது என்பதையும் தெரிவிக்கின்றன. ... ..."

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

16. இவ்வாறாக, **சுக்ரா பீபி**[4] என்ற வழக்கில் வாதியின் மகனை முத்வள்ளியாக நியமிப்பதற்காகவும் மற்றும் அவர் உரியபருவம் அடையும்வரையில் சொத்துக் காப்பாளரை நியமிப்பதற்காகவும், முத்வள்ளி பதவியிலிருந்து பிரதிவாதியை நீக்கும் பரிகாரங்கள் வேண்டப்பட்டபொழுதிலும், வழக்கானது பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலேயே தாக்கல் செய்யப்பட்டதாக நீதிமன்றம் அறிந்தது.

தற்பொழுதைய வழக்கில், 1-ஆம் வாதியான மேல்முறையீட்டாளர், தகுதிவாய்ந்த மருத்துவர் என்ற அடிப்படையில், அறக்கட்டளையில் இணைக்கப்பட்டார்;

மற்றும் முறையிடப்படுவது யாதெனில், மேல்முறையீட்டாளர்கள், அறங்காவலர்கள் குழுவிலிருந்து நீக்கப்பட்ட தற்பொழுதைய அறங்காவலர்கள் எவரும் மருத்துவத் தொழிலைச் சார்ந்தவரல்லர். அச்சூழலில், அறக்கட்டளையின் முறையான மற்றும் ஆக்கப்பூர்வ நிர்வாகத்திற்கான, மருத்துவத் தொழிலிலிருந்தும் மற்றும் பொது மக்களிலிருந்தும் புதிய அறங்காவலர்களை நியமிக்கவும் மற்றும் முறையான நிர்வாகத்திற்கான திட்டத்தை வகுக்கவும் முதன்மைப் பரிகாரம் கோருகிறது. "ஒன்றாம் வாதி உட்பட" என்ற சொற்றொடரானது, ஒன்றாம் வாதி, தகுதிவாய்ந்த மருத்துவர் என்ற அடிப்படையில் துவக்கத்திலிருந்து அறக்கட்டளை உரிமையுடன் இணைந்திருந்தார்; ஆனால், தற்பொழுது நீக்கப்பட்டுள்ளார் என்பது, அச்சூழலிலிருந்து நாம் புரிந்துக்கொள்ளவேண்டியுள்ளது. வேண்டப்படும் பரிகாரமானது, ஒன்றாம் வாதியின் சொந்த உரிமைகளைத் தெரிவிப்பதாக கூறப்படமுடியாது. வேண்டப்பட்ட பரிகாரம் யாதெனில், நிர்வாகத்திற்கான முறையான திட்டத்தை வகுப்பதாகும்; அதன்மூலம் பொதுமக்களுக்கு மருத்துவம் மற்றும் அதுதொடர்பான சேவைகள் வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட அறக்கட்டளையானது, அத்தகைய பொறுப்புகளை நிறைவேற்ற தாமே தகுதிவாய்ந்த அறங்காவலர்கள் மூலம் அந்நோக்கங்களை அடையவும் மற்றும் சாதிக்கவும் முடிந்தது.

17. இவ்வாறாகக் கருதி, மேலே குறிப்பிட்டதுபோன்று, விசாரணை நீதிமன்றத்தினால் பத்தி *21*-இல் எட்டப்பட்ட முடிவானது, மிகவும் சரியானதாகும் மற்றும் அதில் உயர் நீதிமன்றத்தினால் குறுக்கிடப்படத் தேவையில்லை. அறக்கட்டளையின் கட்டுப்பாடானது தொடர்புடைய பிரதிவாதிகளின் கைகளில் இருக்கையில், மேல்முறையீட்டாளர்கள் ஓரம் கட்டப்பட்ட குறைபாடுகளை

வழக்குரையின் சில பத்திகள் தெரிவிக்கின்றன. அறக்கட்டளையானது முறையாக நிர்வகிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள், அறக்கட்டளையானது மருத்துவத் தகுதிவாய்ந்தவர்களால் நிர்வகிக்கப்படாததையும் மற்றும் நிதியானது கையாளப்பட்டதையும் வெளிப்படுத்தின. எனினும், பத்தி 21-இல் அறியக்கூடிய வழக்கின் சாரம் மற்றும் வழக்கில் கோரப்படும் முதன்மைப் பரிகாரம் ஆகியவை விவாதிக்கப்பட்டது பொதுமக்களின் உரிமைகளே என்பதைத் தெளிவுப்படுத்தின. மருத்துவமனையை நிறுவியிருந்த அறக்கட்டளைத் தொடர்பாக, அறக்கட்டளையின் முறையான மற்றும் ஆக்கப்பூர்வ நிர்வாகத்திற்காக, மருத்துவத் தொழிலிலிருந்தும் மற்றும் பொதுமக்களிலிருந்தும் அறங்காவலர்களை நியமிப்பதன் மூலம் முறையான நிர்வாகத்திற்கு வழிவகுக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது; இவ்வழக்கானது, நிச்சயமாக பிரிவு 92-இன் வரம்பிற்குள் வருகிறது.

18. இச்சூழ்நிலைகளில், இம்மேல்முறையீட்டை நாங்கள் அனுமதித்து, உயர் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்தை நீக்கறவு செய்து, மாவட்ட நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட முடிவை உயிர்ப்பிக்கின்றோம். செலவுத்தொகை குறித்து எந்தவித உத்தரவுமின்றி மேல்முறையீடானது அனுமதிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்

மாண்புமிகு நீதியரசர் திரு. வினித் சரண்

புது தில்லி,
03.03.2020.

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."